மலர்-2 இதழ்-7

JANUARY 2026

BALA MANDIR

MALARUM MOTTUKKAL

www.kinshipcare.in www.balamandir.org



மலரும் மொட்டுக்கள்

- KC camp Nammakkal
- KC camp Thiruvannammali
- Book fair Thirupatthur
- Kanchipuram outing
- Christmas celebration Erode
- Group counselling
- Adolescent Discussion
- Parents & Children's Corner

BALA MANDIR
DECEMBER 2025

MALARUM MOTTUKKAL

www.balamandir.org
www.kinshipcare.in

KINSHIP CARE - கின்ஷிப் கேர்

பால மந்திரின் கின்ஷிப் கேர் திட்டம் பல்வேறு மாவட்டங்களில் உள்ள **1165** குடும்பங்களைச் சேர்ந்த **2026** குழந்தைகளுக்கு ஆதரவு அளித்து வருகின்றது.



கின்ஷிப் கேர் நிகழ்ச்சிகள்





பால மந்திர் உறுப்பினர்களும் கின்ஷிப் கேர் குடும்பங்களும் நேரில் சந்திக்கும் கின்ஷிப் முகாம்கள் பல மாவட்டங்களில் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. அதன் தொடர்ச்சியாக, **2025** ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் நாமக்கல் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களில் இந்த முகாம்கள் சிறப்பாக நடத்தப்பட்டன.

KC நிகழ்வுகள் – நாமக்கல்

நாமக்கல் மாவட்டத்தின் கின்ஷிப் கேர் முகாம் **07.12.2025** அன்று திருச்செங்கோட்டில் உள்ள விவேகானந்தா பொறியியல் மகளிர் கல்லூரி வளாகத்தில் சிறப்பாக நடைபெற்றது. இது நாமக்கல் மாவட்ட பயனாளிகளுக்காக மட்டும் நடத்தப்பட்ட முதல் சந்திப்பாகும். இதில் **53** குடும்பங்களைச் சேர்ந்த **163** பேர் ஆர்வமாக கலந்து கொண்டனர்.



BALA MANDIR
DECEMBER 2025

MALARUM MOTTUKKAL

www.balamandir.org
www.kinshipcare.in

நிகழ்ச்சியில் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலகம் **(DCPU)** சார்பில் உளவியல் ஆலோசகர் திருமதி நளினி அவர்கள் கலந்து கொண்டு, அன்பு கரங்கள், மிஷன் வாட்சல்யா, சைல்ட் லைன் போன்ற அமைப்புகளைத் தொடர்ந்து, மாவட்ட மனநல திட்ட உளவியலாளர் திருமதி அர்ச்சனா அவர்கள், கணவரை இழந்த தாய்மார்கள் எதிர்கொள்ளும் மன அழுத்தங்கள் மற்றும் குழந்தைகளை பொறுமையுடன் கையாளுதல், உணர்ச்சிகளை சரியாக கையாளுதல் மற்றும் கைபேசி பயன்பாட்டில் பொறுப்பு ஆகியவை குறித்து பேசினார். மேலும் நாமக்கல் அரசு மருத்துவக் கல்லூரி மற்றும் மாவட்டத்தின் பிற பகுதிகளில் கிடைக்கும் மருத்துவ மற்றும் ஆலோசனை சேவைகள் பற்றிய தகவல்களையும் வழங்கினார்.
ரசுத் திட்டங்கள் பற்றி விளக்கினார். மேலும் குழந்தைகளின் பாதுகாப்பு, புகார் அளிக்கும் முறை மற்றும் தத்தெடுப்பு நடைமுறைகள் பற்றியும் எடுத்துரைத்தார்.







குழந்தைகளின் வயதுக்கு ஏற்ப குழு விளையாட்டுகள் மற்றும் பல்வேறு செயல்பாடுகள் நடத்தப்பட்டன. **9** முதல் **12** ஆம் வகுப்பு வரை படிக்கும் மாணவர்கள், **AICTE** அங்கீகாரம் பெற்ற **IDEA Lab**-ஐ பார்வையிட்டு, நவீன தொழில்நுட்பங்களை பற்றி அறிந்தனர். இதன் மூலம் அவர்களுக்கு தொழில் வழிகாட்டலும் வழங்கப்பட்டது.



தாய்மார்களுக்கு கின்ஷிப் கேர் திட்டத்தின் பயன்கள் மற்றும் புதிய முயற்சிகள் பற்றி விளக்கப்பட்டு, அவர்கள் தங்களின் அனுபவங்களையும் பகிர்ந்தனர்.
கின்ஷிப் கேர் முகாமின் முக்கிய நிகழ்வான **'Block Connect'** தாய்மார்களுக்கிடையே நல்ல உறவையும் நம்பிக்கையையும் உருவாக்கியது. நிகழ்ச்சி முடிவில் அனைவருக்கும் மரக்கன்றுகள் வழங்கப்பட்டு, சுற்றுச்சூழல் பாதுகாப்பின் முக்கியத்துவம் எடுத்துரைக்கப்பட்டது.
மொத்தத்தில், இந்த நிகழ்வு குடும்பங்களுக்கும் நிர்வாகத்துக்கும் இடையிலான நம்பிக்கையை வலுப்படுத்தி, குழந்தைகளின் நலன் மற்றும் எதிர்காலம் குறித்து நல்ல விழிப்புணர்வை ஏற்படுத்தியது.






BALA MANDIR
DECEMBER 2025

MALARUM MOTTUKKAL

www.balamandir.org
www.kinshipcare.in

KC நிகழ்வு – திருவண்ணாமலை

திருவண்ணாமலையில் உள்ள **SVM** இன்டர்நேஷனல் பள்ளியில் **28.12.2025** அன்று திருவண்ணாமலை கின்ஷிப் கேர் முகாம் வெற்றிகரமாக நடைபெற்றது. இதில் **70** குடும்பங்களைச் சேர்ந்த **196** பேர் கலந்து கொண்டனர்.



இந்த முகாமின் நோக்கம், குழந்தை வளர்ச்சி மற்றும் **KC** திட்டங்கள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தி, ஆரோக்கியமான குடும்பங்களை உருவாக்குவதாகும். பெற்றோர்கள் குழந்தைகளின் வளர்ச்சியில் ஈடுபடவும், அவர்களுக்கு நம்பிக்கையும் ஊக்கமும் அளிக்கவும் இந்த முகாம் உதவியது.









இந்த நிகழ்ச்சியின் சிறப்பு, பெற்றோர்களே நிகழ்ச்சியை தொகுத்து வழங்கியதுதான். இது **KC**-க்கு பெருமையான தருணமாக இருந்ததோடு மட்டுமல்லாமல் தாய்மார்களின் தைரியத்தையும் வெளிக்காட்டியது.



திருமதி எல். விஜயகுமாரி, ஓய்வு பெற்ற சமூக சுகாதார செவிலியர், குழந்தைகளின் வளர்ச்சிக்கும் நோய் எதிர்ப்பு சக்திக்கும் நல்ல உணவுகளாக முட்டை, முருங்கை இலை, ராகி போன்ற எளிதில் கிடைக்கும் உணவுகளின் முக்கியத்துவத்தை விளக்கினார்.

அதனைத் தொடர்ந்து, ஹாப்பி ரீடிங் தன்னார்வலர் திரு குமார் அவர்கள், குழந்தைகளின் திறமைகளையும் ஆர்வங்களையும் கண்டறிந்து பெற்றோர்கள் ஊக்குவிக்க வேண்டும் என்று கூறினார்.
KC திட்டங்கள், அதன் நோக்கங்கள் மற்றும் எதிர்பார்ப்புகள் குறித்து திரு நடராஜன் மற்றும் திருமதி பிரியங்கா **(RSW)** விளக்கினர்.






திருவண்ணாமலை **Block Connect**-ல் தாய்மார்கள் ஆர்வமாக கலந்து கொண்டனர். இது ஒரே பகுதியில் வசிக்கும் தாய்மார்களுக்கிடையே உறவை பலப்படுத்த உதவியது.
பெற்றோர்களும் குழந்தைகளும் நிகழ்ச்சி முழுவதும் ஆர்வமாக கலந்து கொண்டனர். சிறுமி இந்துஸ்ரீ கண்ணகி வேடத்தில் மூன்று நிமிடங்கள் தைரியமாக பேசி அனைவரையும் வியப்பில் ஆழ்த்தினார். சிறுவன் தருண் தனது ஹாப்பி ரீடிங் அனுபவங்களை ஆங்கிலத்தில் பகிர்ந்தது அனைவரையும் கவர்ந்தது.

புத்தக திருவிழா – திருப்பத்தூர் (01.12.2025)

திருப்பத்தூர் மாவட்டத்தில் நடைப்பெற்ற புத்தகத் திருவிழாவிற்கு டிசம்பர் மாதம் 1 ஆம் தேதி குழந்தைகள் அழைத்துச் செல்லப்பட்டனர்.








இதில் **7** குழந்தைகள் கலந்துகொண்டனர். இதன் மூலம், அவர்கள் புத்தகம் வாசிப்பதில் ஆர்வம் வளர்த்துக்கொண்டதோடு, புத்தகக் கண்காட்சியின் முக்கியத்துவத்தையும் அறிந்தனர். இது ஒரு சிறிய குழுவாக இருந்ததால் பெற்றோர் மற்றும் குழந்தைகளிடையே ஒரு நல்ல பிணைப்பு உருவாகியது.

BALA MANDIR
DECEMBER 2025

MALARUM MOTTUKKAL

www.balamandir.org
www.kinshipcare.in

ஒரு நாள் சுற்றுலா – காஞ்சிபுரம் (24.12.2025)







டிசம்பர் **24** ஆம் அன்று காஞ்சிபுரத்தில் குழந்தைகளுக்காக கல்வி மற்றும் பொழுதுபோக்கு சுற்றுலா ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.







அவர்கள் **150** வருட பழமையான பாரம்பரிய வீடு "காஞ்சிகுடில்" மற்றும் கைலாசநாதர் கோவிலை பார்வையிட்டு பழைய கால வாழ்க்கை முறை, கலாசாரம் மற்றும் வரலாற்றை ஆர்வமுடன் அறிந்துகொண்டனர். பயணத்தின் போது விளையாட்டுகள் மற்றும் குழுவாக இணைந்து அனைவரும் மகிழ்ந்தனர்.

கிறிஸ்துமஸ் கொண்டாட்டம் – ஈரோடு



கிறிஸ்துமஸ் என்றாலே மகிழ்ச்சியும் பகிர்ந்தளிப்பதும் தான். இதை வெளிப்படுத்தும் வகையில், சமூக பணியாளர் திரு ஜெகன் ராஜ், கிறிஸ்துமஸ் தாத்தா வேடம் அணிந்து, கின்ஷிப் பயனாளிகளின் வீடுகளுக்கு சென்று இன்ப அதிர்ச்சி அளித்தார். இதனால் அவ்விடம் மகிழ்ச்சியும் உற்சாகமும் நிறைந்திருந்தது. குழந்தைகள் மற்றும் பெற்றோர்கள் இதை மகிழ்ச்சியாக வரவேற்றனர்.

அன்பு மற்றும் ஒற்றுமையின் வெளிப்பாடாக அனைவருக்கும் இனிப்புகள் வழங்கப்பட்டு, அந்நாள் அனைவரின் நினைவில் நிற்கும் நன்னாளாக அமைந்தது.







BALA MANDIR
DECEMBER 2025
www.balamandir.org
www.kinshipcare.in


MALARUM MOTTUKKAL

குழு ஆலோசனை (GROUP COUNSELLING)

28.12.2025 அன்று திண்டுக்கல் மற்றும் கரூர் மாவட்டங்களைச் சேர்ந்த தாய்மார்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டது.

8 தாய்மார்கள் பங்கேற்ற இந்த குழுவை திருமதி வானதி அவர்கள் வழிநடத்தினார். தாய்மார்கள் தங்களின் மனக்குறைகள் மற்றும் எதிர்கொள்ளும் சவால்கள் குறித்து பகிர்ந்தனர். அவற்றை கையாளுவதற்கான வழிமுறைகளை திருமதி வானதி அவர்கள் எளிய முறையில் விளக்கினார். தக்க நேரத்தில் வழங்கப்பட்ட இந்த தகவல்கள் தாய்மார்களுக்கு ஆறுதலையும் தைரியத்தையும் வழங்கியது.







வளர் இளம் பருவத்தினர் கலந்துரையாடல் (ADOLESCENT DISCUSSION)

வேலூர், திருப்பத்தூர் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களைச் சேர்ந்த 34 குழந்தைகள் இதில் பங்கேற்றனர்.











திருமதி விஜயலட்சுமி அவர்கள் வழிநடத்திய இந்த கலந்துரையாடலில், குழந்தைகள் மிகுந்த உற்சாகத்துடன் கலந்து கொண்டனர். குழந்தைகள் தாங்களே முன்வந்து, இந்த அமர்வில் இருந்து அவர்கள் எதிர்பார்க்கும் விஷயங்களை பகிர்ந்தனர். அவர்கள் அடுத்த அமர்வுக்காக ஆவலுடன் காத்துள்ளனர்.
குழந்தைகள் தங்களின் கருத்துகள் மதிக்கப்பட்டதாகவும், கேட்கப்பட்டதாகவும் உணர்ந்தனர். பாதுகாப்பான மற்றும் பாரபட்சமற்ற சூழல் இருந்ததால், அவர்கள் தங்கள் எண்ணங்களை எந்த தயக்கமும் இல்லாமல் வெளிப்படுத்தினர்.

BALA MANDIR
DECEMBER 2025

MALARUM MOTTUKKAL

www.balamandir.org
www.kinshipcare.in

பெற்றோர் பகுதி - PARENTS' CORNER

குழந்தைகள் உரிமைகள்: வளர்ச்சிக்கான அடித்தளம்



ஒவ்வொரு குழந்தையும் பிறக்கும் போதே உரிமைகளுடன் பிறக்கின்றது. இந்த உரிமைகள் நன்நடத்தை மற்றும் கல்விச் சாதனைகளின் அடிப்படையில் வழங்கப்படும் பரிசுகள் அல்ல. அவை குழந்தைகளின் மனநலம் மற்றும் சமூக வளர்ச்சியை பேண அடிப்படை தேவைகளாகும்.

குழந்தைகளை அவர்களின் நிறை குறைகளுடன் ஏற்றுக்கொள்ளப்படும்போது அவர்கள் மதிக்கப்பட்டதாக உணர்கின்றார்கள். அவர்கள் பேசும்போது கவனமாகக் கேட்பது, அவர்களுடன் நேரம் செலவிடுவது, அன்பை வெளிப்படுத்துவது போன்ற எளிய செயல்களின் மூலம் "தாங்களும் முக்கியமானவர்கள்" என்ற உணர்வு அவர்களுக்கு உருவாக்கின்றது. குழந்தைகள் தாங்கள் மதிக்கப்படுவதாக உணரும்போது, அவர்களுக்குள் தன்னம்பிக்கை, சுயமரியாதை மற்றும் பெரியவர்கள்மீதான நம்பிக்கை ஆகியவை வளர்கின்றன.
அடுத்த மாத மலரும் மொட்டுகள் செய்திமடல்களில், குழந்தைகளின் உரிமைகள் மற்றும் அவற்றின் முக்கியத்துவத்தைப் பற்றி விரிவாகப் பார்ப்போம்.


உங்கள் சிந்தனைக்கு

ஒவ்வொரு நாளின் இறுதியிலும், இந்த கேள்வியைக் உங்களுக்குள் கேட்டுப் பாருங்கள்

"இன்று என் குழந்தைக்கு, நான் அவன்/அவள், என் வாழ்க்கையில் முக்கியமானவர்கள் என்று உணர வைத்தேனா?"



குழந்தைகள் பகுதி - CHILDREN'S CORNER



A mango tree 🥭 and a neem tree 🌿 grew side by side. The mango tree 🥭 always boasted, "Everyone loves my sweet fruits. No one likes your bitter leaves 🌿!"
The neem tree 🌿 stayed silent. One summer, many travellers came searching for shade. The mango tree was full of bees 🐝🐝🐝, so no one sat under it. But the neem tree 🌿, cool and calm, gave perfect shade 😊. The travellers rested happily 🙏. Seeing this, the mango tree 🥭 felt ashamed. "You never complained, yet you gave more comfort than me," it said.

The neem tree 🌿 replied gently, "Sweetness is loved, but usefulness is respected."

Moral - Pride fades; true worth comes from being helpful.

BALA MANDIR
DECEMBER 2025

MALARUM MOTTUKKAL

www.balamandir.org
www.kinshipcare.in

YOUNG ACHIVERS



கௌசிக் காஞ்சிபுரம்
ரன்னிங் ரேஸ்.



அஷ்வித்ரியாஸ்,
காஞ்சிபுரம் டிராயிங்.



தன்ஷிகா, காஞ்சிபுரம்,
க்விஸ்.



கீதாஷ்ரீ காஞ்ஜிபுரம்
கராதே



மோனிஷ் காஞ்ஜிபுரம்
கராத்தே.



லக்ஷன், காஞ்சிபுரம்,
சிலம்பம் போட்டி.



கணிஸ்கா, காஞ்சிபுரம்
பேச்சுப் போட்டி.



நவநேஷ் காஞ்சிபுரம்
சிலம்பம் போட்டி.



மேத்ரா (சென்னை)
வாள்வீச்சு **(Fencing)**
போட்டி.

BALA MANDIR
DECEMBER 2025

MALARUM MOTTUKKAL

www.balamandir.org
www.kinshipcare.in

YOUNG ACHIVERS



யஷ்வந்த் (வேலூர்) சதுரங்கப் போட்டி.



ஓவியா (திருவள்ளூர்) சிலம்பம் போட்டி.



ஹெலினா (திருவள்ளூர்) அபாகஸ்



யஷ்வந்த் (வேலூர்) சதுரங்கப் போட்டி.



பவிஷ் கார்த்திகேயன் (கிருஷ்ணகிரி) கராத்தேப் போட்டி



ஹஷினி (கிருஷ்ணகிரி) பேச்சுப் போட்டி.



அனு ஹஷினி (திண்டுக்கல்) பேச்சுப் போட்டி.



ரயன் ஜெஸ்வின், (வேலூர்) விளையாட்டுப் போட்டி



ஜஸ்வின் (கடலூர்) கராத்தேவில் முதல் இடம்.

BALA MANDIR
DECEMBER 2025

MALARUM MOTTUKKAL

www.balamandir.org
www.kinshipcare.in

YOUNG ACHIVERS



திண்டுக்கல்லை சேர்ந்த பிரணிதா, மகாஸ்ரி – சிலம்பம் போட்டி.



திவிக்ஷன் (சேலம்)மரத்தான் போட்டி.



பி. தன்வந்த் (திண்டுக்கல்) ஆங்கில கதை சொல்லும் போட்டி.



நிலோஃபர் (சென்னை)




ரதிவர்மன் (திருப்பத்தூர்) ஓவியப் போட்டி.



லிதின் (திருப்பத்தூர்) கல்வித் திறமைக்காக.



வின்சியா லாசர் (திருவள்ளூர்) வினாடி வினா போட்டி.



ஜே. சரண்ஜித் (சென்னை) வரைதல் போட்டி

மேலும் பல செயல்பாடுகள் மற்றும் மகிழ்ச்சிகளை கொண்டாடுவதற்காக நாங்கள் மீண்டும் வருகிறோம். உங்கள் வாழ்வில் மாற்றத்தை உருவாக்க, எப்போதும் உங்கள் அருகில் இருப்போம்!